# 'நான் கண்ட சான்டியேகோ'

பசிபிக் மகா சமுத்திரத்தின்
மடியினில் தவழும்
துடிப்பான, செழிப்பான
செல்வக் குழந்தை சான்டியேகோ;

அழகு, அமைதி, ஆக்கம் யாவும்
இந்நகரின் தனி அலங்காரம்;

தூய்மையான கடலோரங்களின் கிளர்ச்சி
கடற்காற்றினில் தவழும் கவிதை, இவை தரும்
மனக்கிளர்ச்சியில் விளையும் புத்துணர்ச்சி;

புத்துணர்ச்சி நாடி இங்கு ஆண்டுதோறும்
அலைஅலையாய் வந்துவந்து போகும்
உல்லாசப் பயணிகள் கூட்டம்;

மனம் கவரும் 'கார்ல்பேட்'
மலர்ப் படுகைக் கண்காட்சி;
எத்தனை முறை சென்றாலும் திகட்டாத
'கொரனாடோ' பாலம் மேல் கார் சவாரி;
இளையோரையும் பெரியோரையும்
இணையாய் ஈர்க்கும் 'கடல் உலகம்';

பன்னாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்கள்
வரவேற்கும் உயர்மட்ட பல்கலைக் கழகங்கள்;
பண்டிட் ரவிசங்கர் வாழும் இடமென்று
பெயர் தேடிக்கொண்ட 'என்சினிடாஸ்';

'லாஸ் ஏஞ்சலிஸ்' அண்டை நகரானதால்
பக்கத்துத் தெரு திருவிழாத்திடல் போலானது
'டிஸ்னி லேண்டும்', 'யுனிவர்சல் ஸ்டுடியோவும்';

இங்கிருந்து அயல் நாடு செல்ல
அரைமணி நேரம் போதும்
'மெக்ஸிகோ' நாட்டின் 'திகுவானா' நகரவாயில்கள்
வருகவென வரவேற்று நிமிர்ந்து நிற்கும்;

எட்டுப் பேருடன் தொடங்கிய சுய தொழில்கள்
எட்டாயிரம் பேராய் உயர்ந்து தழைத்த
தொழில் வளர்ச்சி உன்னதங்கள் இங்குபல;
புதுத் தொழில் முன்னோரின்
சொர்க்கபுரி 'சான் டியேகோ';

எங்கும் செழுமை எதிலும் வளமை
இவையாவும் இந்நகரின்
மூத்த இலச்சணங்கள் - என்னும்
நலிந்த வீடற்றோரின் துயர் இங்கு
வீதியிற் காணமுடியாமலில்லை;

இல்லாதோர் எங்கும் இல்லை
வன்முறைக்கு என்றும் எங்கும் இடமில்லை
என்ற நன்னில் நாளும் வளர வேண்டும்;

இங்கு வாழ்ந்து வளர்ந்து வரும்
இந்தியக் கண்ட சமுதாயத்துக்
கட்டியம் கூறும் 'ப்ளாக் மௌண்டன்' வளாகம்;

கடல் தாண்டி வந்திடினும்
புகழ் மணக்கும் தமிழ் வளர்ப்போம்
எனப் பெருமிதம் கொள்ளும்
சான் டியேகோ ~~தமிழ்~~ தமிழ்ச் சங்கம்;

இந்த மண்ணில் விளைந்திட்ட
இந்தியப் பயிர்கள்
அகண்ட கண்டங்கள் அனைத்தையும்
இணைக்கும் மனிதப் பாலமாய்
பலம் சேர்க்கும்;

வேற்றுமை யாவையும் தாண்டி
மனித வளர்ச்சிக் கென்றென்றும்
வளம் சேர்க்கும்...

அ. சொ
சான் டியேகோ
ஏப்ரல் 1998.